# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2016. 02. 23 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# மூதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரி
# (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**மூதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். எஸ். தௌபீக்
அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## முதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரி
## (கூட்டிணைத்தல்)

## முதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"முதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரி" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கல்லூரியொன்றை அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நத்வதுல் உலமா அறபுக் கல்லூரியோடு சம்பந்தப்பட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இலங்கையிலுள்ள மூதூரில் இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டிருக்கின்றதாதலாலும் சொல்லப்பட்ட கல்லூரி எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டுநடத்தியுள்ளதாதலாலும் :

சொல்லப்பட்ட மூதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரியின் முகாமைச் சபை கல்லூரியைக் கூட்டிணைப்பதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

***1***. இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, மூதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

*முதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரியைக் கூட்டிணைத்தல்.*

***2***. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "கல்லூரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மூதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரியின் அலுவல்களை இதுவரை முகாமைசெய்தும், கொண்டுநடாத்தியும் வந்தவர்களான ஆட்களும் இச்சட்டத்தினதும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினதும் ஏற்பாடுகளுக்கிணங்க முகாமைச் சபைக்கு இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு

செய்யப்படும்) மூதூர் நத்வதுல் உலமா அறபுக் கல்லூரி என்ற பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் ; அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம் ; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றுவதற்குமான முழுத்தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. எந்தப் பொதுக் குறிக்கோள்களுக்காக கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுகின்றதோ அந்தப் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் ஆகும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது :-

(அ) இலங்கையில் முஸ்லிம்களின் சமய, கல்வி, சமூக, பொருளாதார, பண்பாட்டு அபிவிருத்தியை வளர்த்தல்;

(ஆ) அறபு மொழியில் பூரண அறிவையும், ஆற்றலையும், திறமையையும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதனை இயலச்செய்யும் வண்ணம் அறபுமொழி, அதன் இலக்கணம், இலக்கியம், உரைநடை, கவிதை, வேறு ஒத்த பாடங்கள் என்பவற்றைப் போதித்தலை ஊக்குவித்தல் ;

(இ) 'பிக்ஹ்', தப்ஸீர், ஹதீஸ் என்பவற்றுக்கிணங்க 'சரீஅத்' அல்லது இஸ்லாமிய சட்டக்கோவைகளையும், அறபு மொழியிலுள்ள அதனை ஒத்த வேறு பாடங்களையும் போதித்தலை மேம்படுத்தல் ;

(ஈ) அல்குர் ஆனை தஜ்வீத் முறைப்படி ஓதல், அல்குர்ஆனை மனனமாக ஓதும் 'ஹிப்ழுல் குர்ஆன்' என்பவற்றைப் போதித்தலை ஆதரித்து ஊக்குவித்தல்;

(உ) பந்தி (அ), (ஆ), (இ), (ஈ) ஆகியவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்களுள் ஏதேனுமொன்றில் அல்லது பலவற்றிலும் நுட்பமான அறிவினை மாணவர்கள்

பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்றவையான அறபு மொழியிலுள்ள இதனையொத்த வேறு பாடங்களைப் போதித்தலை ஊக்குவித்தல் ; அத்துடன்

(ஊ) மேற்படி குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதன் இடைநேர்விளைவானவையும் அல்லது எய்துவதற்கு உசிதமானவையும் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு முரணாக இல்லாதனவையுமான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும், விடயங்களையும் செய்தல்.

ஆயின், எப்போதும் இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் விடயங்கள் புறநீங்கலாக ''சுன்னத் வல் ஜமாஅத்'' என்பதற்கிணங்க மட்டுமே கல்லூரியில் படிப்பிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**4**. (1) இச்சட்டத்தினதும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அல்லது உசிதமானவாறான எத்தன்மையானவையுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும் நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள் வங்கிக்கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றிற்கும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் கடன் பெறுவதற்கும், சேகரிப்பதற்கும் அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்துதல், வேலைக்கமர்த்துதல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றிற்கிணங்க தெரிவுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய உறுப்பினர்களைக் கொண்டமைந்த முகாமைச் சபையொன்றினால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபை இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கின்றவர்களான கல்லூரியின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

**6.** (1) ஏதேனும் பொதுக் கூட்டத்திலும் அத்துடன் அதில் சமுகமாகவிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டிற்குக் குறையாத வாக்குகள் மூலமும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய விதிகள் ஆக்கப்பட்ட விடத்து அதேபோன்ற ஒரு கூட்டத்தில் அதே முறையில் மாற்றப்படலாம். அவற்றுடன் சேர்க்கப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கின்றவையான கல்லூரியின் விதிகள் இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபன விதிகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

**7.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று கல்லூரிக்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் கல்லூரிக்குக் கொடுக்குமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவு தொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்கென கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

கல்லூரியினால் கொடுக்குமதியாக உள்ளனவும் அதற்குச் செலுத்தப் படற்பாலனவுமான தனிசுகள்.

**கூட்டுத்தாபனம் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்; அத்துடன் கையுதிர்க்கலாம்.**

**8**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, மரணசாசனக் கையளிப்பு மூலமாகவும் வேறுவகையாகவும் அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும், கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் அச்சட்டத்தின் நோக்கங் களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க அல்லது கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் அதனைக் கையுதிர்க்க உள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக் கப்படுதலும் வேண்டும்.

**கூட்டுத்தாபனத்தின் நிதியம்.**

**9**. கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் எக்காலத்திலாயினும் அவை பெறப்பட்டதாயினும் இதன்கண் தரப்பட்டுள்ள அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பிரயோகிக் கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன்பாகம் எதுவும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்குலாபமாக, கடனாக, மிகையூதியமாக அல்லது வேறு வகையில் எவ்விதத்திலும் இலாபம் என்ற வகையாக கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் ஆகாது.

ஆயின், எவ்வாறாயினும் இப்பிரிவின் ஏற்பாடுகள் -

(அ) கூட்டுத்தாபனத்துக்கு ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அல்லது கூட்டுத்தாபனத்தன் எவரேனும் உறுப்பினர்களுக்கு நியாயமானதும் தகுந்ததுமான ஊதியம் நல்லெண்ணத் துடன் செலுத்தப்படுவதையும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால் அல்லது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவர் பங்குதாரராக இருக்கும் ஏதேனும் கம்பனியால் கூட்டுத் தாபனத்துக்கு வாடகைக்கு விடப்பட்ட எவையேனும் வளவுகளுக்கு நியாயமானதும், தகுந்ததுமான வாடகை செலுத்தப்படுவதையும் ; அத்துடன்

(இ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால் அல்லது ஊழியரால் அவரது பணிகளை அல்லது கடமைகளை நிறைவேற்றுகையில் அல்லது புரிகையில் அல்லது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதில் முகாமைச்சபையின் முன் அங்கீகாரத்தடன் கூறப்பட்ட நியாயமானவையும் தகுந்தவையுமான செலவுகள் மீளளிக்கப்படுவதை அல்லது மீளச் செலுத்தப்படுவதையும்

தடைசெய்தலாகாது.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**10.** பின்வருவனவற்றைச் செய்தல் கூட்டுத்தாபனத்துக்கு சட்டபூர்வமானதாதல் வேண்டும்.

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு தேவைப்படக் கூடியனவும் அந்நோக்கங்களுக்காக சட்டபூர்வமாகக் கொள்ளப்படக்கூடியனவுமான காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், கொள்ளுதல், வாடகைக்குக் கொடுத்தல், நிர்மாணித்தல் அல்லது வேறுவகையில் பெறுதல் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதென அது கருதக்கூடியவாறு கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைச் சபை பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய எவையேனும் முதலீடுகளை வேறுபடுத்தலும், மாற்றியிடுதலும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் நோக்கத்துக்காக பணத்தைத் திரட்டுதல் அல்லது கடனாகப் பெறுதல் அத்துடன் முகாமைச்சபை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் தனிசு அல்லது பொறுப்பு விடுவிக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஒப்பப் பணங்கள், மானியக்கொடைகள், நன்கொடைகள் அத்துடன் எவ்வகையினவுமான கொடைகள் ஆகியவற்றை உள்நாட்டிலிருந்தோ, வெளிநாட்டிலிருந்தோ பரிந்துகேட்டலும், திரட்டுதலும், பெறுதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் எவையேனும் கட்டடங்களை நிர்மாணித்தல், மாற்றஞ் செய்தல் அல்லது பேணுதல் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும் சேவையிலிருந்து நீக்குதலும் அல்லது அவர்களது சேவைகளை முடிவுறுத்தலும் கூட்டுத்தாபனத்தால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக அத்தகைய சம்பளங்களையும், படிகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும்;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக எவரேனும் ஆளுடன் கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி, கூட்டிணைக்கப்படாததாயினும்சரி, ஏதேனும் கம்பெனியுடன், சங்கத்துடன் அல்லது ஆட்கள் குழுவுடன் அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துடன் அல்லது உள்ளூர் அதிகார சபையுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துகொள்ளுதல் ; அத்துடன்

(ஏ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களைத் தகுந்தவாறும் பயனுறவும் நிறைவேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது உசிதமானவையான இச்சட்டத்துக்கும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்துக்கும் முரணாகவிராத வேறு எல்லாக் காரியங்களையும் செய்தல்.

***11***. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது கூட்டுத்தாபனத்தின் விதிகளில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக சாசனத்தில் தங்கள்பெயரை எழுதி ஒப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒப்பம் எவரேனும் ஆள் சாட்சியொருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

***12***. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள்மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறெவரேனும் ஆட்களினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

***13***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்